වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
ANNUAL REPORT

2020







අනුකූලතා තක්සේරු පිළිබඳ ශ්‍රී ලංකා ප්‍රතිඥාන මණ්ඩලය
இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை
Sri Lanka Accreditation Board for Conformity Assessment

SLAB
SRI LANKA ACCREDITATION BOARD

වෙළෙඳ, වාණිජ හා ආහාර සුරක්ෂිතතා අමාත්‍යාංශය
வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு
Ministry of Trade, Commerce and Food Security

வருடாந்த அறிக்கை

2020

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்ச

அங்கத்துவம் :

உள்ளடக்க அட்டவணை

	பக்க இலக்கம்
தலைவரினது செய்தி	II
நிறைவேற்றுச் சுருக்கம்	III
1. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை தொடர்பான அறிமுகம்	1
1.1. தரம் சம்பந்தமான கொள்கை, தொலைநோக்கு, இலக்கு மற்றும் முக்கிய விடயங்கள்	2-4
1.2. இலக்குகள், நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள்	5-8
2. ஆளுநர் சபை	9
3. சட்ட ரீதியான குழுக்கள்	10-11
4. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் செயலாற்றுகை – 2020	12
5. நிதி சார்ந்த தகவல்கள் - 2020	
5.1. நிதித் துறையின் முக்கிய அம்சங்கள்	13
5.2. 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமைக் கூற்று	14
5.3. 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றுகைக் கூற்று	14
5.4. 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியோட்டக் கூற்று	16
5.5. நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்	17
5.6. 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தினது அறிக்கை	18
5.7. கணக்காய்வாளர் நாயகத்தினது அறிக்கை மீதான தலைவரினது கருத்துக்கள்	20
இணைப்புகள்	
இணைப்பு 01 - நிறுவனக் கட்டமைப்பு	43
இணைப்பு 02 - செயற்படுத்துகைக் கட்டமைப்பு	44
இணைப்பு 03 - 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாரான பணிக் குழு விபரங்கள்	45
இணைப்பு 05 - பணிக் குழுவிற்கான பயிற்சிகள் - 2020	47
இணைப்பு 06 - 2020 ஆம் ஆண்டிற்கென புதிதாகப் பெறப்பட்ட தராதர அங்கீகாரங்கள்	49

தலைவரின் செய்தி

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் 2020 வருடாந்த அறிக்கைக்கு இச் செய்தியை முன் வைக்க கிடைத்தமை தொடர்பில் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். தொழிற்சாலைகள், அரச கொள்கை உறுவாக்குநர்கள், கண்காணிப்பு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு இயக்கங்கள் மற்றும் ஆய்வு கூடங்கள் உட்பட இசைவு மதிப்பீட்டு நிறுவனங்கள் போன்ற மிக முக்கியமான பங்குதாரிகளிடையே ஒத்தியல்பு மதிப்பீட்டை வியாபிக்கச் செய்தலும், இசைவு மதிப்பீட்டு நிறுவனம் (CAB) போன்ற நிறுவனங்கள் தொடர்பில் ஆராய்ச்சிகளை முன்னெடுத்தலும், தராதர அங்கீகாரத்தை வழங்குவதும் இந் நிறுவனத்தின் பிரதானமான பணிகளாகக் காணப்படுகின்றன. SLAB இனால் ஆராய்ச்சி நிறுவனங்கள், சான்றுபடுத்தும் நிறுவனங்கள் மற்றும் உறுதிப்படுத்தும் மற்றும் உண்மைப்படுத்தும் நிறுவனங்களுக்கு பயன் மிக்க பல விருத்திகளுடன் கூடியதாக நிறுவனம் பங்களிப்பை வழங்கியுள்ளது. தொற்று நோய் நிலை காரணமாக ஏற்பட்ட இன்னல்களுக்கு மத்தியிலும், CAB தொடர்பில் தொலைத் தூர/நிகழ் நிலை மதிப்பீடுகள், நிகழ் நிலை பாட நெறிகள் நடாத்தப்பட்டதன் வாயிலாக SLAB இனால் பயிற்சிகள் வழங்கப்பட்டும், நிர்வாக சபையினதும், தராதர அங்கீகார சபையினதும் கூட்டத் தொடர்கள் உள்ளடங்களாக தேவையான அனைத்து கூட்டத் தொடர்களும் நிகழ் நிலை அடிப்படையில் நடாத்தப்பட்டு தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் பாவனையாளர்களுடன் கூட்டாக பல்வேறு வகையான உபாய வழிகளின் ஊடாக தெளிவான விருத்தியை அடைந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு கிடைத்தது.

2020 ஆம் ஆண்டில் SLAB நிறுவனம் தேசத்தின் தராதர அங்கீகார நிறுவனமாக அதன் பணி நோக்கங்களை மேலுயர்த்தும் பொருட்டு SLAB இன் சட்டத்தில் திருத்தங்களை முன்னெடுப்பதற்குத் தேவையான வரைவுபடுத்தல் செயற்பாடுகளை ஆரம்பித்தது. அண்மைக் காலமாக சர்வதேச வர்த்தகத்திலும், ஏனைய தொழிற்சாலைகளிலும் ஏற்பட்ட அதீத விருத்தி காரணமாக புதிதாக தராதர அங்கீகார செயன் முறைகள் தொடர்பில் முன் வைக்கப்படுகின்ற கோரிக்கைகள் மற்றும் தராதர அங்கீகார செயன் முறைகளின் விடயப் பரப்புகளை விஸ்தீரணப்படுத்துதல் அத்தியாவசியமான துரித தேவையென அடையாளம் காணப்பட்டுள்ளது. சட்டத்தின் திருத்தங்களின் கீழ் ஒருங்கிணைக்க வேண்டிய பிரேரணைகளை ஒன்று திரட்டும் பொருட்டு SLAB இன் இசைவாக்கத்தை மதிப்பிடும் நிறுவனங்கள், கண்காணிப்பாளர்கள், வணிக சபை, SLAB மதிப்பீட்டாளர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களுடன் கூட்டாக நிகழ் நிலை கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டன.

SDG க்கள் மற்றும் சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கை வரையறைக்கு உட்பட்டதாக, SLAB ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தேசிய காபன் கட்டுப்பாட்டு அலகு, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை, விவசாய அமைச்சு போன்ற பிரதானமாக கண்காணிப்பாளர்களுடன் கூட்டாக தராதர அங்கீகாரத்தின் கீழ் பொருத்தமான மாதிரியுறுக்களை அடையாளம் காணும் பொருட்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கும் நோக்கில் தொடர்ச்சியாக செயற்பட்ட வண்ணமிருந்தது. தொழில்நுட்ப ஒழுங்கு விதிகளை செயற்படுத்துகையில் பயன்படுத்த வேண்டிய தொழில்நுட்ப ஒழுங்கு விதிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

தேசிய தராதர அங்கீகார வழங்கல் அதிகார சபையான SLAB, ஒரு சில சர்வதேச தராதர அங்கீகாரங்களுடன் கூடிய நிறுவனமொன்றென கருதப்படுவதுடன், உற்பத்தியாளர்களுடனும், சேவை வழங்குநர்களுடனும் கூட்டாக ஏற்கத தக்க செயற்பாட்டின் ஊடாக தொழில்நுட்ப ரீதியாக அங்கீகாரம் பெற்ற மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கும், சர்வதேச சந்தையினுள் உட்பிரவேசிப்பதற்கும் தேவையான பங்களிப்பு வழங்கப்படும். வெளி நாட்டு தராதர அங்கீகார நிறுவனங்களினதும், இலங்கை தராதர அங்கீகார வழங்கல் நிறுவனங்களினதும் தராதர அங்கீகாரத்திற்கான செலவை ஒப்பிடுகையில் வெளி நாட்டு தராதர அங்கீகார நிறுவனங்களின் மொத்த தராதர அங்கீகார செலவு SLAB இனால் அறவிடப்படும் கட்டணத்தைப் போன்று ஐந்து மடங்கு அதிகமாக காணப்படுவதாக அடையாளம் காணலாம்.

இலங்கையின் பொருளாதாரம், சமூக மற்றும் சுற்றாடல் நன்னெறி மிக்க பயன்பாட்டை மேலுயர்த்தும் மற்றும் சர்வதேச ரீதியாக பெயர் பெற்ற தராதர அங்கீகார சேவைகளை வழங்கும் நோக்கங்களை உறுதிப்படுத்தும் பொருட்டு தராதர அங்கீகார சபைக்கு உதவி வழங்குதல் தொடர்பில் நான் நிர்வாக சபையின் அங்கத்தவர்கள், பணிப்பாளர்/தலைமை நிறைவேற்று அதிகாரி மற்றும் SLAB குழுவுக்கு நன்றியை தெரிவிப்பதற்கு விரும்புகின்றேன்.

கலாநிதி சம்பத் வஹல
தலைவர்
இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரியினது நிறைவேற்று அடிப்படையிலான தொகுப்பு



இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை 2020 ஆம் ஆண்டில் பல மாத காலமாக நிலவிய கொவிட் 19 தொற்று நோய் நிலைக்கு மத்தியிலும் குறிப்பிடத்தக்களவான விருத்தியை அடைந்துள்ளது. அரசு பயணத் தடையை அறிமுகப்படுத்திய காலத்தில், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பணி மனை நிகழ் நிலை வழிமுறையின் ஊடாக தமது பணிகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. புணி மனை தொடர்ந்து துண்டிப்பற்ற இணைய வசதியுடன் தமது பணிகளை முன்னெடுப்பதற்கு வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டதுடன், முடிவுகளின் விளைவைத் திறனாக்குவதற்கென நிர்வாகத்தினால் மிக உண்ணிப்பாக செயற்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை உலக வரையறுக்கப்பட்ட பங்குதாரிகளினது அங்கீகார தின நிகழ்வை "தராதர அங்கீகார உணவுப் பாதுகாப்பு விருத்தி" எனும் தொனிப் பொருளின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட பங்குதாரிகளினது பங்குபற்றுதலுடன் நடாத்தியது. இந் நிகழ்வின் போது இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அதன் புதுப்பிக்கப்பட்ட இணைய தளத்தை அறிமுகப்படுத்தியதுடன், விளம்பர கையேடு மற்றும் மின் செய்தி மடலை வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தது. இது தவிர, முக்கிய பங்குதாரிகளினது பங்குபற்றுதலுடன் ஒரு வெபினாரையும் நடாத்தியது.

தொற்று நோய் காரணமாக மதிப்பீடுகளை நடத்துவதில் நாங்கள் பல சவால்களுக்கு முகங் கொடுக்க வேண்டியிருந்தது, எனவே APAC வழங்கிய வழிகாட்டுதல்களின் அடிப்படையில் தொலை நிலை மதிப்பீடுகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. மெய் நிகர் மதிப்பீடுகளை எதிர்கொள்ளத் தேவையான தயார் நிலையைக் கண்டறிய அங்கீகாரம் பெற்ற CAB களில் ஆரம்பக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. மெய் நிகர் சூழலில் மதிப்பீட்டை நடாத்துவதற்கு மதிப்பீட்டாளர்களுக்கு வழிகாட்டப்பட வேண்டியுள்ளது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை ஆண்டின் பிற்பட்ட காலப் பகுதியில் தொலை நிலை மதிப்பீடுகளை நடாத்துவதற்கு ஆரம்பித்தது.

மதிப்பீடுகளை நடத்துவதற்கு வசதியாக வீடியோ கூட்டத் தொடர் கான்வசிங் வசதி போன்ற தேவையான உட் கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு மேலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. நிகழ் நிலை பயிற்சியை ஊக்குவிக்கும் பொருட்டு ஸ்மார்ட் போர்டு போன்ற கருவிகள் ஒழுங்கு செய்யப்பட்டன. ஆளுநர் மன்றக் கூட்டங்கள், அங்கீகாரக் குழுக் கூட்டங்கள், தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் போன்ற அனைத்துக் கூட்டங்களும் நிகழ் நிலை வழிகாட்டலின் ஊடாக நடாத்தப்பட்டன.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினால் ISO/IEC 17011 (இணக்க மதிப்பீடு: இணக்க மதிப்பீட்டு அமைப்புகளை அங்கீகரிக்கும் அமைப்புகளுக்கான பொதுவான தேவைகள்) இணங்க சர்வதேச அங்கீகாரத்தைப் பேணுதல் மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற அங்கீகாரச் சேவைகளை இணக்க மதிப்பீட்டு அமைப்புகளுக்கு வழங்குவதுடன் தொடர்புடைய அனைத்து வகையான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் தேசிய தர உட் கட்டமைப்பு (NQI) சான்றிதழின் கீழ், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கும், சோதனை, அளவுத் திருத்தம், ஆய்வு ஆகிய துறைகளில் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட அங்கீகார சேவைகளை வழங்குவதன் மூலம் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பயன்படுத்துபவர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் வழி வகைகளை முன்னெடுத்தது.

2020 ஆம் ஆண்டில், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை தேசிய அங்கீகார ஆணையமாக தனது சேவைகளை மேலும் வலுப்படுத்த SLAB சட்டத்தில் தேவையான மாற்றங்களைச் செய்யத் தொடங்கியது. சர்வதேச வர்த்தகம் மற்றும் பிற துறைகளில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்களுடன் கூடியதாக புதிய அங்கீகாரத் திட்டங்களுக்கான கோரிக்கையையும், தற்போதுள்ள அங்கீகாரத் திட்டங்களின்

விரிவாக்கத்திற்கான கோரிக்கையையும் முன் வைத்தல் காலத்தின் தேவையாக மாறியுள்ளது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை இணங்குதல் மதிப்பீட்டு அமைப்புகள், ஒழுங்குபடுத்துபவர்கள், வர்த்தக சபை, இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை மதிப்பீட்டாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் போன்றோருடன் மெய் நிகர் சந்திப்புகளை நடத்தியது.

SDG கள் மற்றும் தேசிய கொள்கை கட்டமைப்பிற்கு உட்பட்டு, SLAB தொழில்நுட்ப விதிமுறைகளை செயல்படுத்துவதில் பயன்படுத்தக்கூடிய அங்கீகாரம் பெற்ற இணக்க மதிப்பீட்டு சேவைகளின் பொருத்தமான மாதிரிகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு உதவுவதற்கும், ஆதரவளிப்பதற்கும் முக்கிய ஒழுங்குமுறை நிறுவனங்களுடன் தொடர்ந்து பணியாற்றியது.

நிறுவனமானது குழு உறுப்பினர்கள், மதிப்பீட்டாளர்கள் மற்றும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை ஊழியர்களுக்கு அங்கீகாரம் வழங்கும் நடவடிக்கைகள் தொடர்பாக அவர்களின் திறன்கள் மற்றும் அறிவை வளர்ப்பதற்கென பயிற்சிகளை வழங்கியது, 2020 ஆம் ஆண்டில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது இரண்டு உதவி இயக்குநர்கள் மதிப்பீட்டாளர்களாக பதவி உயர்த்தப்பட்டனர்.

2019 ஆம் ஆண்டில் மொத்த வருமானம் 47.43 மில்லியன் ரூபாவாக இருந்த அதே சமயம் 2020 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற வருமானம் 37.08 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இதன் மூலம் 10.35 மில்லியன் ரூபா வருமானம் குறைந்திருப்பதாக அடையாளம் காணலாம். 2020 ஆம் ஆண்டில் 72% என்ற தொடர் செலவின விகிதத்தை விட ளுடுயுடீ வருமானத்தை ஈட்டக் கூடிய வாய்ப்பைப் பெற்றது.

சந்திரிக்கா திலகரத்ன
பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரியி
இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

அறிமுகம்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை (SLAB), தேசிய தராதர அங்கீகாரத்திற்கான சட்ட வரைவு கட்டமைப்பைத் தன்னகத்தே கொண்டிருப்பதுடன், 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் நிலை நாட்டப்பட்ட ஒரு நிறுவனமாகவும் காணப்படுகின்றது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, வர்த்தக அமைச்சின் கீழ் செயற்பட்ட வண்ணமிருந்ததுடன், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை சட்டத்தின் பிரகாரம் சபைக்கென பதின் மூன்று (13) அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர். அமைச்சர் சபையின் ஒரு அங்கத்தவரை தலைவராக நியமிப்பார். பணிப்பாளர், சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியாகச் செயற்படுவதுடன், அவர் ஆளுகைச் சபையின் செயலாளராகவும் செயற்படுகின்றார்.

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான இணக்க மதிப்பீடுகளை எளிதாக்குவதற்கும், அங்கீகார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் தேவையான அங்கீகார சேவைகளை வழங்குததல் சபையினது பொறுப்பாகக் காணப்படுகின்றது. குறிப்பாக அங்கீகார சேவைகளின் கீழ் பரிசோதனை / மருத்துவம் / அளவுத் திருத்த ஆய்வகங்கள், கட்டமைப்பு / உற்பத்தி / தனி நபர்கள் சான்றிதழ் அமைப்புகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், GHG உறுதிப்படுத்தல் மற்றும் சரிபார்ப்பு அமைப்புகள், தொழில், வணிக சமூகம், நுகர்வோருக்கு குறிப்பிட்ட சேவைகளை வழங்கும் திறன் சோதனை வழங்குநர்கள் மற்றும் சிறந்த ஆய்வு கூடப் பயிற்சி போன்ற விடயங்கள் உள்ளடங்குகின்றன. மேலும் இலங்கை தராதர அங்கீகார சபை இலங்கை அரசுடன் கூட்டாக இலங்கை தராதர அங்கீகார சபையினது 2005 ஆம் ஆண்டின் சட்ட இலக்கம் 32 இன் ஒப்புதலுடன் 2005 செப்டம்பர் 23 ஆம் திகதி தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது. இது தராதர வழங்கல் நிறுவனமாக ISO/IEC 17011 (அங்கீகார மதிப்பீடு - அங்கீகரிப்பு அமைப்புகளுக்கான தேவைகள் - அங்கீகரித்தல் நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்ற நிறுவன அங்கீகாரம் மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற அமைப்பு) பரஸ்பர அங்கீகார ஏற்பாடு (ILAC MRA), சர்வதேச அங்கீகார மன்றத்தின் பல் தொகுதி இணக்கப்பாடு (IAF MLA) மற்றும் ஆசிய பசுபிக் பரஸ்பர அங்கீகார ஒத்துழைப்பு அமைப்பு (APAC MRA) போன்ற நிறுவனங்களுடன் கூட்டாக அதனது வாடிக்கையாளர்களுக்கு சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அங்கீகார சேவைகளை வழங்கிய வண்ணம் செயற்படுகின்றது.

தரம் சம்பந்தமான கொள்கை

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை என்பது உயர் மட்ட நேர்மை, திறமை, பயன்பாடு என்பனவற்றின் உச்ச கட்ட நிலையில் தராதர அங்கீகாரத்தை வழங்குவதில் அர்ப்பணித்துப் பணி புரியும் சேவை வழங்கும் ஸ்தாபனமாகும்.

வாடிக்கையாளர்கள், ஏனைய பங்காளிகள், வர்த்தகத் துறையினர் ஆகியோரின் மாற்றமடைந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதே சமயத்தில், ISO/IEC 17011, ஏனைய தொடர்புடைய சர்வதேச தரங்கள் மற்றும் கொள்கைகளுக்கு உட்பட்ட வகையில் தராதர அங்கீகாரச் சேவைகளை வழங்குவதில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அர்ப்பணிப்புடன் பணிபுரிகின்றது. சர்வதேச அங்கீகாரத்தை மேம்படச் செய்வதற்கென சர்வதேச நிறுவனங்களின் கடமைகளில் திறமையாகவும், செயல் திறன் மிக்கதாகவும் முன்னெடுப்பதற்கு இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை தயாராகவுள்ளது.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் நடவடிக்கைகளில் உச்ச கட்ட தொழில் திறனுடனான பங்களிப்பை வழங்குவதற்கென சேவையாளர்களும், மதிப்பீட்டாளர்களும் அவர்களது தகைமைகளைத் தொடர்ச்சியாக தரமுயர்த்துவதற்கான சூழலை இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை வழங்குகின்றது.

ஒத்தியல்பு மதிப்பீடு மற்றும் தராதர அங்கீகாரம் என்பனவற்றின் செயற்பாடுகளையும், தேவைகளையும், சூழல் கோரிக்கைகளையும் தொடர்ச்சியாக மீளாய்வு செய்வதோடு, இவற்றில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கென பொருத்தமான மாற்றங்களை இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை பூர்த்தி செய்கின்றது.

பாரபட்சமற்ற கொள்கை

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பிரதான நோக்கம், 2005 ஆம் ஆண்டின் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை சட்ட இலக்கம் 32 இன் கீழ் நிறுவப்பட்டுள்ள நோக்கத்தின் பொருட்டு இலங்கை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதாகக் காணப்படுகின்றது. இதன் கீழ் அங்கீகாரம் தொடர்பான ஒட்டு மொத்த கொள்கைகளும், உத்திகளும் பாரபட்சமின்றி முன்னெடுக்க வேண்டியுள்ளது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் நடப்பு நிர்வாகக் குழுவின் கீழ், கொள்கை மற்றும் மூலோபாயத்தை உருவாக்கும் செயற்பாட்டில் அனைத்து பங்குதாரர்களின் பங்கேற்புக்கான சாத்தியம் உறுதி செய்யப்பட்டு, அவை பாரபட்சமற்ற முறையில் செயற்படுத்தப்பட்ட வண்ணமுள்ளன.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பணியாளர்கள் மற்றும் குழுக்கள் எந்தவொரு தேவையற்ற வணிக, நிதி மற்றும் பிற அழுத்தங்களிலிருந்தும் விடுபட்டு, பாரபட்சமற்ற தன்மையை சமரசம் செய்து, ஏதேனும் சாத்தியமான வட்டி முரண்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் தங்கள் செயற்பாடுகள் மற்றும் தனித் தன்மையை வெளித் தரப்பு ரீதியாக உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்த வண்ணமுள்ளது. அங்கீகாரம் தொடர்பான முடிவுகள் திறமையான பணியாளர்கள் அல்லது மதிப்பீடுகளை மேற்கொள்பவர்களிடமிருந்து வேறுபட்ட குழுக்களினால் முன்னெடுக்கட்ட வண்ணமுள்ளன.

அங்கீகாரம் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளைத் தவிர, அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கென விண்ணப்பிப்பதற்கு விரும்பும் நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளினது தீர்மானங்களைப் பாதிக்கக்கூடிய விடயங்கள் தொடர்பாக இலங்கையில் தேசிய அங்கீகார அதிகார சபை எனும் பொறுப்பு மிக்க அரச நிறுவனமாக எந்தவொரு ஆலோசனை வழங்கும் செயற்பாடுகளையும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை மேற்கொள்வதில்லை

தொலைநோக்கு, இலக்கு மற்றும் முக்கிய விடயங்கள்

தொலைநோக்கு

உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட, மாற்றத்துக்கு உள்ளாகக் கூடிய மற்றும் நவீன அங்கீகார அமைப்புகளுக்குத் தேசிய பொருளாதாரம் மற்றும் சமூக நல் வாழ்வு அடிப்படையில் பங்களிப்பு செய்தல்

இலக்கு

உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கென பொருட்களுக்கும், சேவைகளுக்குமான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கென, சர்வதேச அங்கீகாரம் கொண்ட தராதர அங்கீகார சேவைகளுக்கு ஊக்கமளித்து அவற்றை வழங்குதல்.

முக்கிய விடயங்கள்

S நேர்மையுடனும், உச்ச கட்ட நீதியின் வழிகாட்டுதலுடனும் சேவையாற்றுதல்.

L சகல விடயங்களையும் தொடர்ச்சியாக அறிந்து கொள்ளல்.

A பங்குதாரர்களின் தேவைகளை நம்பகமான முறையில் வழங்கவென குழு அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளல்.

B சுயாதீனமாகவும், பக்கச் சார்பற்ற முறையிலும் செயற்படுதல்.

இலக்குகள், நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள்

	உந்துதல் பகுதி	இலக்குகள்	குறிக்கோள்கள் (முக்கிய செயல் திறன் குறிகாட்டிகள்)	உத்திகள்
1.	வெவ்வேறு பங்குதாரர்கள் மத்தியில் அங்கீகாரத்தை ஊக்குவித்தல்	1. அங்கீகாரம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து பங்குதாரர்களிடையே விழிப்புணர்வை உருவாக்குங்கள்	1. கொள்கை உருவாக்குநர்களின் நேரடி சந்திப்பு 2. பயிற்சி பட்டறைகள்/வெபினர்கள் 3. வெகுசன ஊடகம் / இணைய தளம் / சமூக ஊடகங்களின் பயன்பாடு	1. அறியப்பட்ட நிறுவனங்கள்/பொது மக்களின் எண்ணிக்கை 2. புதிய அங்கீகாரத் திட்டங்கள் குறித்து அறியப்பட்ட தொழில்கள்/சிஏபிகளின் எண்ணிக்கை
		2. NQI க்குள் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் நிலைப்படுத்தல்	1. முன்மொழியப்பட்ட தேசிய தர கவுன்சிலின் (NQC) கீழ் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை மற்றும் பிற NQI நிறுவனங்களை நிலை நிறுத்துவதில் பரப்புரை செய்தல்	
		3. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் தரத் தன்மை	1. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பிராண்டின் விளம்பரம் நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும்	1. தரத் தன்மை நடவடிக்கைகளின் எண்ணிக்கை
2.	பாரபட்சமற்ற தன்மையை உறுதி செய்யும் போது அங்கீகாரத்தை விரிவுபடுத்துதல்	1. தற்போதுள்ள அங்கீகார திட்டங்களின் கீழ் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் 2. தற்போதுள்ள வாடிக்கையாளர்களிடையே நோக்கங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் 3. புதிய அங்கீகார திட்டங்களை அறிமுகப்படுத்துதல்	1. சந்தை நுண்ணறிவு அமற்றும் வழக்கறிஞர் வலையமைப்பை உருவாக்குதல் 2. சந்தை ஊக்குவிப்பு 3. தேசிய/சர்வதேச திட்ட உரிமையாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் ஈடுபடுதல்	1. வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையின் சதவீத அதிகரிப்பு 2. நோக்கம் நீட்டிப்புகளின் எண்ணிக்கை 3. அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அங்கீகாரத் திட்டங்களின் எண்ணிக்கை
3.	அங்கீகாரத்தில் கட்டுப்பாட்டாளர்களின் செயல் ஈடுபாடு	1. கட்டுப்பாட்டாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட இணக்க மதிப்பீட்டுச் சேவைகளைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல் 2. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை சர்வதேச அங்கீகாரம் பெற்ற அங்கீகார	1. கட்டுப்பாட்டாளர்களுக்கான நேரடி தனிப் பயனாக்கப்பட்ட உணர் திறன் திட்டங்கள் 2. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது முடிவெடுக்கும்	1. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை வலையமைப்பில் உள்ள ரெகியுலேட்டர்களின் எண்ணிக்கை 2. அங்கீகாரம் பெற்ற இணக்க மதிப்பீட்டுச் சேவைகளைப் பயன்படுத்துவதற்காகவுள்ள

		சேவைகளுக்கான ஒழுங்கு முறைகளில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அங்கீகாரம் பெற்ற சேவைகளைக் குறிப்பிடுவதற்கு ஒழுங்குபடுத்துபவர்களை ஊக்குவித்தல்	குழுக்களில் கட்டுப்பாட்டாளர்களின் பிரதிநிதித்துவம் 3. மேப்பிங் மற்றும் ரெகியுலேட்டர்களை அவர்களின் ஒழுங்குமுறைகளுக்குத் தொடர்புடைய சாத்தியமான அங்கீகாரத் திட்டங்களுடன் சீரமைத்தல் 4.ரெகியுலேட்டர் இணைப்பு திட்டம்	உறுதியான கட்டுப்பாட்டாளர்களின் எண்ணிக்கை 3. அங்கீகாரம் பெற்ற இணக்க மதிப்பீட்டுச் சேவைகளைக் குறிப்பிடும் வகையில் வழங்கப்பட்ட விதிமுறைகளின் எண்ணிக்கை
4.	பணியாளர்களின் திறன் மேம்பாடு மற்றும் சாதகமான பணிச் சூழலில் சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம் நிறுவன ரீதியான திறனை வலுப்படுத்துதல்	1. அங்கீகாரத்தின் விரிவடையும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென நிறுவனத்தின் தொழில்நுட்ப திறனை விரிவுபடுத்துதல் 2. சாதகமான பணிச் சூழலை உருவாக்குதல் மற்றும் பணியாளர் நலன் திட்டங்களை உருவாக்குதல்	1. தற்போதுள்ள மனித வளங்களை மேம்படுத்துதல் மற்றும் புதிய பணியாளர்களைப் பெறுதல் 2. பொருத்தமான தொழில்நுட்பம், சட்ட, சுற்றுச் சூழல் மற்றும் சமூக மேம்பாடுகளுடன் ஸ்மார்ட் நிறுவன அமைப்பை உருவாக்குதல்	1. புதிய திறன்கள் ஒன்று சேர்க்கப்பட்டன 2. புதிய தொழில்நுட்ப, சட்ட மற்றும் சமூக மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளன
5.	நிதி மற்றும் சுற்றுச் சூழல் நிலைத் தன்மையை உறுதி செய்தல்	1. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையை நிதி ரீதியாக நிலையானதாகவும் நிலா நாட்டுதல்	1. தற்போதைய அங்கீகார திட்டங்களில் வாடிக்கையாளர் பங்களிப்புத் தளத்தை அதிகரித்தல் 2. சந்தை தேவையின் அடிப்படையில் புதிய அங்கீகார திட்டங்களை அறிமுகப்படுத்துதல் 3. பயிற்சித் திட்டங்களை ஊக்குவித்தல் 4. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை இன் கட்டளையின் வரம்பிற்குள் புதிய வருமானம் ஈட்டும் முயற்சிகளை அடையாளம் காணுதல்	1. தற்போதைய அங்கீகார திட்டங்களின் மூலம் வருமான சதவீதம் அதிகரிப்பு 2. பயிற்சி திட்டங்களின் மூலம் வருமான சதவீதம் அதிகரிப்பு
		2. சுற்றுச் சூழல் சார்ந்த சிறந்த நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல்	1. ஆற்றல் - திறன் மேம்பாடு 2. காலநிலை நட்பு முயற்சிகள் 3. பொருள் பயன்பாட்டு திறன் 4. பசுமை அறிக்கை	1. ஆற்றல் பயன்பாட்டின் சதவீதக் குறைவு 2. நிலையான பயன்பாட்டின் சதவீதக் குறைவு 3 பசுமை வீட்டு வாயு உமிழ்வின் சதவீதக் குறைவு
6.	செயற்பாடுகளின் நிலைத் தன்மையின் மூலம் தராதர அங்கீகாரத்திற்கான சர்வதேச அங்கீகாரத்தைப் பேணுதல் மற்றும் மேம்படுத்துதல்	1. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அங்கீகாரம் பெற்ற CAB களால் வழங்கப்பட்ட இணக்க மதிப்பீட்டு அறிக்கைகளுக்கான சர்வதேச அங்கீகாரத்தை உறுதி செய்தல்	1. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அங்கீகாரத்தை ஊக்குவிப்பதில் முகங் கொடுக்க வேண்டியேற்பட்டுள்ள இன்றைய சிக்கல்கள், புதிய தேவைகள் மற்றும்	1. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை தலையீட்டின் மூலம் தீர்க்கப்பட்ட அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் / அறிக்கைகள் தொடர்பான சிக்கல்களின் எண்ணிக்கை

			சாத்தியமான தீர்வுகளை அடையாளம் காண்பதற்கென தொடர்புடைய நிறுவனங்களுடன் (EDB, வர்த்தகத் துறை, ஏற்றுமதியாளர்கள் சங்கங்கள், அங்கீகாரம் பெற்ற CAB கள், உறுப்பினர் உள்ளூராட்சி நிறுவனங்கள்) வலையமைப்பு 2. சர்வதேச அங்கீகார நிறுவனங்களின் தொடர்புடைய மன்றங்களில் பிரதி நிதித்துவத்தைக் காட்டுதல், சக மதிப்பீடுகள், பயிற்சிகள் மற்றும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அங்கீகாரத்தை மேம்படுத்துதல். 3. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் இன்றைய சர்வதேச தராதர அங்கீகார நிலையை மேம்படுத்துதல்	2. புதிய எம்எல்ஏ / எம்ஆர்ஏ க்களுக்கான விண்ணப்பங்கள் முன் வைக்கப்படுதல் 3. புதிதாக எம்ஆர்ஏ / எம்எல்ஏ அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் 4. பங்கேற்ற கூட்டங்கள் / மன்றங்களின் எண்ணிக்கை
		2. பிராந்திய மற்றும் உலகலாவிய ரீதியான அங்கீகார மேம்பாட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்றல்	1 சக மதிப்பீட்டில் பங்கேற்றல் 2. கூட்டங்களில் / கமிட்டிகளில் பங்கேற்றல் 3. பயிற்சித் திட்டங்களின் வளவாளராகப் பங்கேற்றல்	1. பங்கு மதிப்பீடுகள், கூட்டங்கள், குழுக்களின் எண்ணிக்கை

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது செயற்பாடுகள்

- சர்வதேச மற்றும் தேசியத் தராதரங்களின் பிரகாரம், ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புக்களின் (CABs) தராதர அங்கீகாரத்தைப் பூர்த்தி செய்தல்

    - ஆய்வு கூடங்களின் பரிசோதனைகள் (ISO/IEC 17025)
    - அளவைகளை நிர்ணயிக்கும் ஆய்வு கூடங்கள் (ISO/IEC 17025)
    - மருத்துவ ஆய்வு கூடங்கள் (ISO 15189)
    - ஒழுங்கு முறைகளுக்கான சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் (ISO/IEC 17021)
    - உற்பத்திப் பொருட்களுக்கான சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் (ISO/IEC 17065)
    - ஆட்களுக்கான சான்றிதழ் வழங்கும் அமைப்புகள் (ISO/IEC 17024)
    - பசுமை வீட்டு வாயுக்களைச் (GHG) செல்லுபடியாக்குதலுக்கும், சரி பார்த்தலுக்குமான அமைப்புகள் (ISO 14065)
    - கண்காணிப்பு அமைப்புகள் (ISO/IEC 17020)
    - தகைமை மதிப்பீட்டுத் திட்டங்கள் (ISO/IEC 17043) மற்றும்
    - சிறந்த ஆய்வு கூட வழி முறைகள் (GLP)

- தேசியத் தராதரக் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வழி முறைகளுக்கு ஏற்ற வகையில், தராதர அங்கீகார நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

- தொடர்புடைய பங்காளித்துவ அமைப்புக்களுக்கென மதிப்பீட்டாளர் பயிற்சித் திட்டங்களையும், விழிப்புணர்ச்சித் திட்டங்களையும், கருத்தரங்குகளையும் நடாத்துதல்.

- ஒத்தியல்பு மதிப்பீடு பற்றிய ஒத்துழைப்பிற்கும், நல்லிணக்கத்திற்குமான தேசிய மன்றமாக செயற்படுதல்.

- தொழில்நுட்ப அறிவை மேம்படச் செய்து விரிவாக்குவதன் மூலம் தராதர அங்கீகார ஒத்தியல்பு நடவடிக்கைகளிலும், தராதர அங்கீகாரத்திலும் உன்னத நிலையை ஏற்படுத்துதல்.

- தராதர அங்கீகாரத்திற்கென தேசிய வழிமுறைகளை மேம்படுத்தப்படுவதற்கு உதவுதல்.

- அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் பரஸ்பர அங்கீகாரம் சம்பந்தமான உடன்படிக்கைகளில் ஈடுபடுதல்.

- தராதர அங்கீகாரத்தை வழங்குதல், நீடித்தல், குறைத்தல், இடை நிறுத்துதல், மீளப் பெறுதல் என்பனவற்றிற்கென ஒத்தியல்பு மற்றும் கண்காணிப்பு மதிப்பீடுகளை ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல், நடாத்துதல்.

ஆளுநர் சபை

சபையினால் நியமிக்கப்பட்ட பதின் மூன்று (13) உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக கூட்டமைப்புக்கு சபையின் அதிகாரங்களும், செயற்பாடுகளும் கையளிக்கப்பட்டுள்ளன. 2005 ஆம் ஆண்டின் 32 வது இலக்க இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை சட்டத்தின் கீழ் சமாந்தர அமைச்சின் அமைச்சர் தேவையான கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக ஒவ்வொரு மாதமும் குழுக் கூட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்.

31 டிசம்பர் 2020 இல் உள்ளவாரான ஆளும் தரப்பினரினது குழுக் கட்டமைப்பு பின்வருமாறு :

கலாநிதி சம்பத் வஹல - தலைவர்
முதுநிலை விரிவுறையாளர், முகாமைத்துவக் கல்வி பீடம், சபரகமுவா இலங்கைப் பல்கலைக்கழகம்

திரு ஆர் எம் எஸ் பி எஸ் பண்டார – உறுப்பினர்
பணிப்பாளர், திறைசேரி செயற்பாடுகள்
பொதுத் திறைசேரியின் பிரதிநிதி

திருமதி சித்திக்கா சேனாரத்ன – உறுப்பினர்
பணிப்பாளர் நாயகம்
இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்

திரு எஸ் என் அகுரன் திலக – உறுப்பினர்
வேலை பார்க்கும் பணிப்பாளர் நாயகம், உதவிப் பணிப்பாளர் அளவீட்டு அலகுகள், தராதர மற்றும் சேவைகள் திணைக்களம்

திருமதி எம் எம் ஜி கே மீகஹா கொட்டுவ – உறுப்பினர்
பணிப்பாளர் (தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி)
விஞ்ஞானம் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி

திரு நிரஞ்சன் திசாநாயக்க – உறுப்பினர்
நாட்டு முகாமையாளர் / உப துணைவர் / இலங்கை வணிக வலாகத்தின் இறக்குமதி பிரிவு

திரு வி. சிவஞானசோதி – உறுப்பினர்
முன்னால் செயலாளர், தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம் மற்றும் புனரமைப்பு, வாட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் செயற்பாடுகள்

திரு ஜெ எம் சமன் என் ஜயசிங்க – உறுப்பினர்
மேலதிக செயலாளர், உள்ளக வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலன்கள்

திரு பி பி எஸ் ஆர் டி சில்வா – உறுப்பினர்
முது நிலை உதவிச் செயலாளர், சுகாதார மற்றும் உள்ளூர் மருந்து சேவைகள்

திரு ருவன் டி சில்வா – உறுப்பினர்
வணிக மற்றும் கைத்தொழில் இலாகா கூட்டமைப்பின் பிரதிநிதி (FCCI)

சட்ட ரீதியான குழுக்கள்

கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுவில் ஆளும் மன்றத்தைச் சேர்ந்த நிறைவேற்று அதிகாரமற்ற மூன்று அங்கத்தவர்களும், கணக்காய்வாளர் அதிபதியின் பிரதிநிதியும், குழுவின் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி, பிரதிப் பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) மற்றும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் உள்ளகக் கணக்காய்வாளர் ஆகியோரும் அழைப்பின் பேரில் பங்குபற்றுவார்கள். ஆளும் மன்றத்தின் திறைசேரியின் பிரதிநிதி, குழுவின் தலைவராகப் பணியாற்றுவார்.

குழுவின் முக்கிய கடமை ஆளும் மன்றத்திற்கு சகல விதத்திலும் உதவுவதாகும். உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக திட்ட வட்டமான வழி முறை ஒன்றைக் கடைப்பிடித்தல், வெளிவாரி நிதி அறிக்கையிடல், கடப்பாடுகள் சம்பந்தமான பொறுப்புக்களை நிறைவேற்றுதல் என்பனவாகும். கணக்காய்வுக் குழுவிற்கு அறிக்கையிடும் சுயாதீன உள்ளகக் கடப்பாட்டை இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை கொண்டுள்ளது. வெளிவாரி கணக்காய்வு நடவடிக்கைகளின் திறமையைக் கண்காணித்து குழுவிற்கு பரிந்துரைகளை முன் வைக்கும் பொறுப்பையும் குழு கொண்டுள்ளது.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் குழு 01 கூட்டத்தை நடாத்தியுள்ளது. உள்ளகக் கணக்காய்வாளர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோர் சமர்ப்பித்த அறிக்கைகளும், கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் அறிக்கைகளும் ஆளும் மன்றத்தின் கூட்டத்தின் போது பரிசீலனைக்கென சமர்ப்பிக்கப்படும்.

திரு ஆர் எம் எஸ் பீ எஸ் பண்டார	தலைவர்/ மன்றத்தின் அங்கத்தவர்	திறைசேரியின் பிரதி நிதித்துவம்
திருமதி எம் எம் ஜி கே மீகஹகொட்டுவ	தலைவர்/ மன்றத்தின் அங்கத்தவர்	விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் பிரதி நிதித்துவம்
திரு வீ சிவக்ஞான சோதி	தலைவர்/ மன்றத்தின் அங்கத்தவர்	தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம் மற்றும் புனரமைப்பு அமைச்சு
திரு. டப்ளியு. ஆனந்த	பார்வையாளர்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதி
நியமிக்கப்படவில்லை	பார்வையாளர்	சமாந்தர அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காளர்
திருமதி சந்திரிகா திலகரத்ன	செயலாளர்	பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை
திருமதி ஹர்ஷ திலகரத்ன	அழைக்கப்பட்டவர்	உதவிப் பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) பதில் கடமையாற்றும், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை
திருமதி டி. வனிகசுந்தர	கூட்டுநர்	உள்ளகக் கணக்காய்வாளர், ,லங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

செயற்பாட்டு முகாமைத்துவம்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது முகாமைத்துவச் செயற்பாடுகள் பணிப்பாளர் / தலைமை நிறைவேற்று அதிகாரியினால் மற்றும் இணைப்பு 01 இல் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு நிறுவன கட்டமைப்பில் காட்டப்பட்டுள்ள படி தொழில் நுட்ப, நிதி மற்றும் நிர்வாக ஊழியர்களின் ஆதரவுடன் சபையின் அனைத்து நிர்வாகச் செயற்பாடுகளையும் முன்னெடுத்தல் பொறுப்பாகக் காணப்படுகின்றது.

மனித வளம்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது மனித வளம் குறைந்த எண்ணிக்கையிலான உள்ளகப் பணியாளர்கள் மற்றும் கல்வித் துறை மற்றும் பல்வேறு தொழில் முறை அமைப்புகளிலிருந்து பெறப்பட்ட மிகப் பெரும் மதிப்பீட்டாளர்களினதும் உள்ளடக்கத் தொகுப்பைக் கொண்டுள்ளது. இணக்க மதிப்பீட்டு அமைப்புகளின் திறனை உறுதி செய்வதில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை பங்கு வகிக்கின்றது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் விற்பனை முதல் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியைக் காட்டியது. இது இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது செயற்பாடுகளில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தியது. எனினும் ஊழியர்களுக்கு நிரப்பிகளுடன் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அதன் அங்கீகார அமைப்புகளை ஏனைய வெளிநாட்டு அங்கீகார அமைப்புகளுக்கு இணையாக பராமரிக்கக் கூடிய வாய்ப்பைப் பெற்றது. வழக்கமாக, ஒரு புதிய அலுவலர் சுயாதீனமாக வேலை செய்வதற்கு முன்பு சம்பந்தப்பட்ட துறையில் திறமையானவராக மாறுவதற்கு அவர் குறைந்த பட்சம் மூன்று வருடங்கள் அத் துறையில் பணியாற்ற வேண்டியுள்ளது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை ஊழியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் விவரங்கள் இணைப்பு 02 இல் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது பணிக் குழு



செயலாற்றுகைச் சிறப்பமிசங்கள் - 2020

2020 ஆம் ஆண்டில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அதன் 15 வருட கால நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தது. மேலும் அதிக எண்ணிக்கையான சம்பந்தப்பட்ட பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வு கூடங்கள், மருத்துவ ஆய்வு கூடங்கள், சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் என்பனவற்றுக்கு இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை சர்வதேச தரங்களுக்கு அமைய அதன் சேவைகளை வழங்கியது. இந்த தராதர அங்கீகார திட்டங்கள், சர்வதேச கொள்கைகளுக்கு அமையவும், தராதர அங்கீகார அமைப்புக்களுக்கான ISO / IEC 17011 க்கு அமையவும் முகாமைத்துவப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டன

தராதர அங்கீகார சேவைகள்

2020 ஆம் ஆண்டில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இணக்க மதிப்பீட்டு அமைப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கியது.

அங்கீகார வகுதிகள்	விருத்தி
பரிசோதனை ஆய்வு கூடங்கள்	புதிய – 05
அளவுத் திருத்த ஆய்வு கூடங்கள்	புதிய – 01
சான்றிதழ் உடல்கள் - தொகுதிகள்	நோக்க நீடிப்புகள் - 01
சான்றிதழ் உடல்கள் - உற்பத்திகள்	புதிய – 02, நோக்க நீடிப்புகள - 01
மருத்துவ ஆய்வு கூடங்கள்	புதிய - 03, நோக்க நீடிப்புகள் - 01

பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினால் தராதரத் திட்டங்களின் பிரகாரம் வேறுபட்ட தராதர அங்கீகார உடல்கள் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பாக 19 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும், 354 பயிலுநர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள் இணைப்பு 05 இல் தரப்பட்டுள்ளன.

சர்வதேச நிகழ்வுகளில் பங்கேற்பு

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அங்கீகாரத் திட்டங்களுக்கான சர்வதேச அங்கீகாரத்தைப் பேணுவதற்காக, உறுப்புறை அமைப்புகளாக சர்வதேச அங்கீகார அமைப்புகளின் இடைக் கால மற்றும் வருடாந்த கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை பங்களிப்பை வழங்கக் கூடிய மற்றும் அனுசரணை வழங்க வேண்டிய பொறுப்பு காணப்படுகின்றது. அதன்படி, 2020 ஆம் ஆண்டில் கொவிட் 19 தோற்று நோய் நிலை காரணமாக இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை பின்வரும் சர்வதேச நிகழ்வுகளை நிகழ் நிலை கூட்டங்கள் / தொலை நிலை சக மதிப்பீதுகளின் வாயிலாக முன்னெடுத்துள்ளன.

செல்வி சந்திரிகா திலகரத்ன, பணிப்பாளர்/தலைமை நிறைவேற்று அதிகாரி, திரு எல். எச். டி. பந்துசோம, தராதர அங்கீகார பிரதிப் பணிப்பாளர், செல்வி சந்தித்த எதிரிவீர - தராதர அங்கீகார பிரதிப் பணிப்பாளர் ஆகியோர் APAC 2020 இன் விழாவில் பங்கேற்றிருந்தனர்.

ILAC மற்றும் IAF இடைக் கால கூட்டுக் கூட்டத் தொடரையும், வருடாந்த கூட்டுக் கூட்டத் தொடரையும் 2020 ஆம் ஆண்டில் இரத்து செய்திருந்தது. அனைத்து குழுக் கூட்டங்களும் நிகழ் நிலை வழியினூடே நடாத்தப்பட்டதுடன், குறித்த நிகழ் நிலைக் கூட்டங்களில் செல்வி சந்திரிகா திலகரத்ன, பணிப்பாளர்/தலைமை நிறைவேற்று அதிகாரி, திரு எல். எச். டி. பந்துசோம, தராதர அங்கீகார பிரதிப் பணிப்பாளர், செல்வி சந்தித்த எதிரிவீர - தராதர அங்கீகார பிரதிப் பணிப்பாளர் ஆகியோர் பங்கேற்றனர்.

உத்தியோகபூர்வ அதிகாரியாக செல்வி சந்திரிகா திலகரத்ன, பணிப்பாளர்/தலைமை நிறைவேற்று அதிகாரி ஆகியோர் பங்கேற்றனர்.

நிதித் துறையின் முக்கிய அம்சங்கள் - 2020

வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் மீள் செலவினமாகக் குறிப்பிடப்பட்ட தொகை ரூபா 72.03 மில்லியன் ஆகும். இதற்கான திறைசேரியின் பங்களிப்பு ரூபா 19.63 மில்லியன் ஆகும். உண்மையான மீள் செலவினம் ரூபா 51.50 மில்லியன் ஆகும். மீள் செலவினம் சம்பந்தமாகக் காணப்பட்ட பற்றாக்குறை பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானத்தின் மூலம் ஈடு செய்யப்படுகின்றது.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை ரூபா 37.08 மில்லியனை வருமானமாக ஈட்டியது. வழங்கப்பட்ட தராதர அங்கீகாரச் சேவைகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் மூலம் இத் தொகை கிடைக்கப் பெற்றது. மீள் செலவைத் தாண்டிய வருமானம் 72% ஆகும்.

2020 ஆம் ஆண்டிற்கென திறைசேரி வழங்கிய மூலதனச் செலவின நிதி ஏற்பாடு ரூபா 0.5 மில்லியனாகும். இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது வருமானம் மூலமான மொத்த மூலதனச் செலவு இலங்கை ரூபா 1.97 மில்லியனாகும்.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அதன் நடவடிக்கைகள் மூலம் அடைந்த செலவினத்திலும் பார்க்க, பெற்றுக் கொண்ட வருமானத்தின் அதிகரித்த தொகை ரூபா 10.37 மில்லியன் ஆகும்.

செலவினப் பகுப்பாய்வு

வருடம்	மீள் செலவினம் (ரூபா மில்லியன்)				மூலதனச் செலவினம் (ரூபா மில்லியன்)		
	பாதீட்டுச் செலவு	உண்மைச் செலவு	திறை சேரி மானியங்கள்	ஈட்டுதல்கள்	பாதீட்டுச் செலவு	உண்மைச் செலவு	திறை சேரி மானியங்கள்
2007	14.70	11.50	8.23	2.83	1.50	1.40	1.50
2008	17.29	13.98	10.56	3.27	2.74	0.41	0.50
2009	19.60	15.01	11.47	3.32	2.33	0.44	0.66
2010	21.81	15.51	8.91	5.30	3.57	0.63	0.50
2011	23.30	21.33	13.28	8.12	3.08	0.63	0.80
2012	28.18	29.29	15.50	12.9	1.82	1.75	1.37
2013	33.00	36.61	14.80	18.08	2.00	1.51	1.50
2014	38.00	42.85	16.09	27.58	2.00	1.71	1.73
2015	64.50	63.14	12.20	55.24	3.00	1.64	1.25
2016	56.00	49.43	15.70	31.74	5.20	4.67	2.00
2017	60.5	57.91	16.16	36.03	2.00	2.05	0.91
2018	66.0	59.79	17.06	45.23	4.25	3.64	-
2019	71.8	66.67	19.49	47.43	6.92	2.43	1.4
2020	72.70	51.50	19.64	37.08	3.69	1.97	0.5

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	2020 இல் உள்ளவாறு	2019 இல் உள்ளவாறு
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
காசும் - காசுக்குச் சமமானவையும்	**19**	30,459,855.03	18,913,916.92
உள் நாட்டுக் கொள்வனவிற்கான முற் பணம்		-	-
பெறுகைகள்	**11**	4,752,305.03	9,782,014.21
முத்திரிகைகள்		15,000.00	15,000.00
காகிதாதிகளினது கையிருப்புகள்		255,680.69	230,264.69
முன் கொடுப்பனவுகள்	**17**	129,040.80	149,137.62
தேசிய கட்டுமான வரிக் கொடுப்பனவுகள்		32,557.83	32,557.83
சம்பளக் கட்டுப்பாடு		7,622.00	-
நீக்கக் கூடிய நிலையான சொத்துக்கள்		-	-
பெறுமதி ஒன்று சேர் வரிக் கட்டுப்பாடு		175,959.01	175,959.01
இடர் கடன்கள்	**16**	1,224,400.00	1,114,700.00
மீளப் பெறப்பட்ட வைப்புக்களும், முற்பணங்களும்	**10**	3,520,500.00	2,195,700.00
		40,572,920.39	32,609,250.28
நடைமுறையற்ற சொத்துக்கள்			
ஆதனம் - இயந்திரங்களும், உபகரணங்களும்	**31**	9,925,358.63	18,409,906.15
இடர்க் கடன்கள்	**16**	1,478,346.12	1,076,826.52
அருவச் சொத்துக்கள்			
புலமைச் சொத்துக்கள்	**18**	364,895.01	313,693.02
பணிக் கொடை மூதலீடுகள்		3,376,551.64	3,073,218.19
		15,145,151.40	22,873,643.88
மொத்தச் சொத்துக்கள்		**55,718,071.79**	**55,482,894.16**
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைத்தியக் காப்புறுதி		750.00	2,400.00
கடனாளிகள்	**23**	683,863.42	530,246.53
திரண்ட மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	**14**	3,570,621.28	5,462,668.29
வருடாந்த விடுவிப்பு தொடர்பான ஏற்பாடு		603,841.67	361,998.07

முற் பணமாகப் பெறப்பட்டவை	**27**	339,304.35	339,304.35
பணிக் கொடை ஏற்பாடு		-	-
		5,198,380.72	**6,696,617.24**
நடைமுறையற்ற பொறுப்புக்கள்			
பணிக் கொடை ஏற்பாடு	**24**	5,311,154.50	3,692,078.00
மொத்தப் பொறுப்புக்கள்		**10,509,535.22**	**10,388,695.24**
நிகர சொத்துக்கள்		**45,208,536.57**	**45,094,198.92**
நிகர சொத்துக்கள் / பங்குகள்			
திரட்டிய நிதியம்	**12**	55,628,074.35	51,897,167.02
வேறுபட்ட வருமானம் - அரச மானியம்	**13**	(12,234,137.78)	(8,617,568.10)
- ஏனைய மானியங்கள்	**20**	1,814,600.00	1,814,600.00
நிகர சொத்துக்கள் / பங்குகள்		**45,208,536.57**	**45,094,198.92**

5 தொடக்கம் 8 வரையிலான பக்கங்களில் இடம்பெற்றுள்ள கணக்கியல் கொள்கைகள் மற்றும் 9 தொடக்கம் 14 வரையிலான குறிப்புக்கள் என்பன இந்த நிதித் துறை அறிக்கைகளில் முக்கிய பங்கை வகிக்கின்றன. சபையின் ஆளுநர் மன்றம் இந்த நிதி அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்குப் பொறுப்பாக உள்ளது. இந்த நிதி அறிக்கைகள் (அமைக்கப்படவிருக்கும்) புதிய சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதோடு, அவர்களினால் கைச்சாத்திடப்படும்.

R.M.S.P.S Bandara
Council Member
Representing General Treasury

Dr.Siddhika Senaratne
Council Member

Chandrika Thilakarathne
Director/CEO
Sri Lanka Accreditation Board for
Conformity Assessment

K.H.N Chandrasiri
Assistant Director (Finance/Admin)-Acting
Sri Lanka Accreditation Board for
Conformity Assessment

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகைக் கூற்று

	குறிப்புகள்	2020 இல் உள்ளவாறு ரூபா	மீள் தெரிவிப்பு 2019 இல் உள்ளவாறு ரூபா	பாதீடு
வருமானம்	**1**	**61,760,518.61**	**73,108,659.80**	**72,703,700.00**
மொத்த வருமானம்		**61,760,518.61**	**73,108,659.80**	**72,703,700.00**
நிருவாக மற்றும் நிறுவகச் செலவுகள்				
தனிப்பட்ட ஊதியங்கள்	**2**	22,991,533.86	23,196,340.54	30,753,400.00
ஒப்பந்தச் சேவைகள்	**6**	17,489,168.26	24,669,498.05	28,431,400.00
விநியோகம்	**4**	1,711,047.38	1,644,877.60	1,850,000.00
பங்களிப்பு மற்றும் அங்கத்துவக் கட்டணம்	**7**	1,772,429.82	1,716,318.18	2,059,500.00
போக்குவரத்துச் செலவு	**3**	324,110.94	2,402,511.50	2,728,450.00
பராமரிப்புச் செலவு	**5**	2,047,728.91	2,651,430.67	3,979,600.00
ஏனையவைகள்	**8**	5,136,494.76	10,132,611.24	1,871,350.00
நிதிச் செலவுகளும், ஏனையவைகளும்	**9**	5,000.00	21,950.00	30,000.00
கட்டுப்பாட்டு பொறுப்பு வழங்கல்		-	-	1,000,000.00
மொத்தச் செலவுகள்		**51,477,513.93**	**66,675,007.16**	**72,703,700.00**
வருமானத்தை மிஞ்சிய செலவுகள்		**10,283,004.68**	**6,433,652.64**	**-**

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிகர மூலதன / ஒப்புரவு மாற்றம் பற்றிய அறிக்கை

	வேறுபட்ட வருமானம்	ஏனைய மானியங்கள்	ஒதுக்கப்பட்ட நிதி	மொத்தம்
2019 ஜனவரி 01 இல் உள்ளவாரான மீதி	9,940,521.20	1,814,600.00	30,862,107.48	42,617,228.68
முந்திய வருட சீராக்கம்	-	-	-	-
2019 ஜனவரி 01 இல் பொருந்திய மீதி	9,940,521.20	1,814,600.00	30,862,107.48	42,617,228.68
கிடைத்த மானியங்களும் - மூலதனச் சொத்துக்களின் பயன்பாடும்	1,400,000.00		-	1,400,000.00
வருடத்திற்கான தேய்மானம்	(5,185,517.88)		-	(5,185,517.88)
தேய்மான சரி செய்தல் - மேலதிகம்	5,431.51			5,431.51
இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான அடமானம்	-		-	-
தேர்ச்சிப் பரிசோதனைத் திட்டத்தின் கீழான அடமானம்	(176,596.03)			(176,596.03)
இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை கணக்கியல் பொதியின் கீழான அடமானம்	-		6,433,652.64	6,433,652.64
வருடத்திற்கான அதிகரிப்பு / (குறைவு)				
2019 டிசம்பர் 31 இல் உள்ளவாரான மீதி	**5,983,838.80**	**1,814,600.00**	**37,295,760.12**	**45,094,198.92**
2020 ஜனவரி 01 இல் உள்ளவாரான மீதி	5,983,838.80	1,814,600.00	37,295,760.12	45,094,198.92
சீராக்கம் - நிலையான சொத்துக்களுக்கான ஒன்று சேர்ப்புகள்	500,000.00		-	500,000.00
வருடத்திற்கான தேய்மானச் சீராக்கம்	(4,028,271.67)		-	(4,028,271.67)
நிலையான சொத்துகளாகப் பெறப்பட்ட சொத்துக்கள்	-			(108,832.61)
பரீட்சிப்புகளின் கீழான வருமான சரி செய்கை				259,200.00
தேர்ச்சிப் பரிசோதனைத் திட்டத்தின் கீழான அடமானம்	(88,298.01)			(88,298.01)
பயிற்சிகளின் கீழான வருமான சரி செய்கை				(42,244.89)
மோட்டார் கார் தேய்மான சரி செய்கை				8,683,333.34
தேய்மான சரி செய்கை	-			(14,825,153.19)
வருடத்திற்கான அதிகரிப்பு / (குறைவு)			10,283,440.68	10,283,440.68
2020 டிசம்பர் 31 இல் உள்ளவாரான மீதி	**2,367,269.12**	**1,814,600.00**	**47,578,764.80**	**45,208,536.57**

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியோட்டக் கூற்று

விபரங்கள்	2020 ரூபா	2019 ரூபா
வருமானத்தைத் தாண்டிய ஆண்டுக்குரிய செலவு	10,283,004.68	6,433,652.64
சீராக்கல்கள் :		
மூலதன மானியம் தவணை அடிப்படையில் அடமானம்	(6,642,821.30)	(6,971,582.32)
நிலையான சொத்துக்கள் மீதான தேய்மானம்	4,028,271.67	5,185,517.88
பணிக் கொடை ஏற்பாடு	1,619,076.50	949,167.00
நிலையான சொத்துக்கள் - அகற்றல்கள் மீதான இழப்பு	-	30,480.10
இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை தகவல் தொழில்நுட்ப திட்ட தவணை அடிப்படை அடமானம்	-	-
நிலையான சொத்துக்களின் அகற்றல்கள் மூலமான வருமானம்	-	(35,980.10)
வருடாந்த விடுமுறை மீதான ஒதுக்கீடு	603,841.67	361,998.07
பணிக் கொடைக் கொடுப்பனவு	-	484,390.00
பணிக்கொடை முதலீடு மூலமான வட்டி	303,333.45	298,303.34
திறமைச் சோதனை தவணை அடிப்படையில் தீர்வு	88,298.01	176,596.03
கணக்கியல் பொதியின் படிப்படியான அறவிடல்	-	-
செயற்படு மூலதன மாற்றத்திற்கு முன்னரான நடைமுறை மேலதிகம்	**10,283,004.68**	**6,912,542.64**
செயற்படு மூலதன மாற்றங்கள்		
முற் பணப் பெறுகைகளின் குறைவு / (அதிகரிப்பு)	-	(226,000.00)
முற் பணக் கொடுப்பனவுகள் குறைவு / (அதிகரிப்பு)	20,096.82	86,916.91
எல்பி முற்பண அதிகரிப்பு / (குறைவு)	-	-
வைத்திய காப்புறுதி அதிகரிப்பு / (குறைவு)	(1,650.00)	(2,400.00)
பெறுகைகள் குறைவு / (அதிகரிப்பு)	(4,728,264.28)	(4,196,395.63)
பணிக் கொடை ஒதுக்கீடு அதிகரிப்பு / (குறைவு)	-	(385,987.50)
மீள் வழங்கல் வைப்பு அதிகரிப்பு / (குறைவு)	(1,324,800.00)	929,016.00
கடனாளிகள் அதிகரிப்பு / (குறைவு)	153,616.89	108,184.76
வருடாந்த விடுமுறை ஏற்பாடு அதிகரிப்பு / (குறைவு)	241,843.60	165,852.34
சம்பளக் கட்டுப்பாட்டு அதிகரிப்பு / (குறைவு)	(7,622.00)	-
நிலையான சொத்துக்களின் அகற்றல் அதிகரிப்பு / (குறைவு)	-	35,980.10
திரட்டிய செலவினம் அதிகரிப்பு / (குறைவு)	(1,199,781.26)	1,100,491.13
NBT செலுத்துகை அதிகரிப்பு / (குறைவு)	-	(32,435.38)
VAT கட்டுப்பாட்டு அதிகரிப்பு / (குறைவு)	-	(74,492.72)
கையிருப்பு மற்றும் ஏனையவை அதிகரிப்பு / (குறைவு)	(25,416.00)	(62,507.18)
முத்திரிகைகளின் அதிகரிப்பு / (குறைவு)	-	-
ஏனைய கொடுப்பனவுகள் அதிகரிப்பு / (குறைவு)	(692,265.75)	(568,756.79)
செயற்படு நடவடிக்கைகளிலிருந்து நிகர காசுப் பாய்ச்சல்	**12,175,291.26**	**3,794,808.68**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்		
நிலையான சொத்துக்கள் சுவீகரிப்பு	(1,794,376.60)	(2,432,752.64)

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது கணக்கியல் வகுதிகள்	(139,500.00)	-
வெளியேற்றுகைப் பொருட்களின் மூலமான வருமானம்	-	5,500.00
வருடத்திற்கான இடர்க் கடன் மானியம்	(1,950,000.00)	(1,400,000.00)
வருடத்திற்கான இடர்க் கடன் மானிய அறவீடுகள்	1,438,780.40	1,217,550.00
பணி நன் கொடை கொடுப்பனவு	-	(484,390.00)
பணி நன் கொடை ஒதுக்கீடு	1,619,076.50	850,764.50
பணி நன் கொடை முதலீட்டின் மீதான வட்டி	(303,333.45)	(298,303.34)
முதலீட்டு நடவடிக்கைகளில் உபயோகிக்கப்பட்ட தேறிய நிதி	**(1,129,353.15)**	**(2,541,631.48)**
நிதித் துறை நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
பெறப்பட்ட அரச மானியம்	500,000.00	1,400,000.00
நிகர நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்	**500,000.00**	**1,400,000.00**
காசும் - காசுக்குச் சமமானவற்றினதும் தேறிய அதிகரிப்பு / குறைவு	11,545,938.11	2,653,177.20
வருட ஆரம்பத்தில் காசும் - காசுக்கு சமமானவையும்	18,913,916.92	16,260,739.72
வருட இறுதியில் காசும் - காசுக்கு சமமானவையும்	**30,459,855.03**	**18,913,916.92**

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்

1.1 முக்கியமான கணக்கியற் கொள்கைகள்

பொது

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை (SLAB) 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை சட்டத்தின் கீழ் நிலை நாட்டப்பட்ட தேசிய தராதர அங்கீகார அதிகார சபையாகும்.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது பதிவு அலுவலகத்தின் செயற்பாடுகளும், வர்த்தகச் செயற்படுத்துகை செயற்பாடுகளும் இலக்கம் 104/ஏ, கிதுலாவல வீதி, பொரளை, இலங்கை எனும் முகவரியில் அமையப் பெற்ற அலுவலகத்தின் மூலம் முன்னெடுக்கப்படுகின்றன.

1.2 தயாரிப்பின் அடிப்படை மற்றும் கணக்கியல் கொள்கைகள்

பொது நிறுவனத் துறை திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் 3/2013 இன் பிரகாரம் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.2.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள் (SLPSAS 1)

இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.2.2 கவனப் போக்கு

ஆளுகைச் சபையினால் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது திறன் மற்றும் கொள் திறன் செயற்படுத்துகைகள் தொடர்பில் மதிப்பீட்டு ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. இதன் வாயிலாகச் சபையைக் கலைப்பதற்கோ அல்லது செயற்பாடுகளை இடை நிறுத்துவதற்கோ கருத்துக்கள் முன் வைக்கப்படவில்லை.

1.2.3 பங்களிப்புத் திட்டங்களினது வரையறைகள்

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

பணியாளர்கள் தத்தமது பதவி நிலைகள் மற்றும் விதி முறைகளுக்கு ஏற்ப ஊழியர்கள் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தகைமை பெறுகின்றனர். இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு முறையே 15% மற்றும் 3% ஆன மொத்த ஊதியப் பங்களிப்பை வழங்குகின்றது. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு அனுப்பப்படுகின்ற அனைத்துப் பணங்களும் எவ்வித நிலுவையுமின்றி சரியான நேரத்தில் அனுப்பி வைக்கப்படுகின்றன.

1.3. சொத்துக்களும் - அவற்றின் மதிப்பீட்டிற்கான அடிப்படை அம்சங்களும்

ஐந்தொகைத் தினத்திலன்று நடைமுறைச் சொத்துக்கள் என இனங் காணப்பட்டுள்ளவை, வங்கி நிலுவைகளும், வழமையான நடவடிக்கைக் காலத்தில் அல்லது ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருடம், இவற்றில் எது குறுகிய காலமோ அதில் ரொக்கப் பணமாக மாற்றக் கூடியவை எனக் கருதப்படுபவையுமாகும். நடைமுறைச் சொத்துக்கள் தவிர்ந்த ஏனைய சொத்துக்கள் எனப்படுபவை, ஐந்தொகை திகதியில் இருந்து ஒரு வருட காலத்துக்கு அப்பாலும் வைத்திருப்பதற்கு சபை விரும்பும் நடைமுறையற்ற சொத்துக்களாகவுள்ளன.

அபிவிருத்தி நடவடிக்கைகள் என்ற தலைப்பின் கீழ் காண்பிக்கப்பட்ட திறன் மதிப்பீட்டுத் திட்டத்திற்கான செலவினங்களில் 50% ஆன தொகை தவணை அடிப்படையில் தீர்க்கப்பட்டதோடு, எஞ்சியுள்ள தொகை அடுத்த வருட ஆரம்பத்திற்கெனக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

1.3.1 ஆதனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள்

ஆதனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் என்பன வரலாற்று ரீதியான கொள் விலையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. சொத்துக்களின் பெறுமானத்தை அவற்றின் மதிப்பீட்டு பயனுள்ள காலத்தில் பதிவழிக்கவென ஆண்டொன்றுக்கு பின்வரும் வீதத்தில் நேர் கோட்டு முறையில் தேய்மானம் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

சொத்துக்கள்	**வீதம்**
மோட்டார் வாகனங்கள்	12.5%
தளபாடங்கள்	20%
அலுவலக உபகரணங்கள், தொலைபேசி மற்றும் தொலைநகல் இயந்திரங்கள்	20%
வாயுப் பதனாக்கிகள் மற்றும் குளிரூட்டல் இயந்திர அலகுகள்	12.5%
கணினி, கணினி அச்சியந்திரம், புரொஜெக்டர், நிழற் பிரதி இயந்திரங்கள்	25%
கட்டிடங்களும் - கட்டமைப்புகளும்	33.33%

ஒரு சொத்தின் தேய்மானம் அச் சொத்து பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்திலிருந்து ஆரம்பிப்பதுடன், அச் சொத்தைப் பாவனையிலிருந்து அகற்றுவதற்கு அடையாளம் காணப்படுகின்ற / காணப்பட்ட ஆண்டின் இறுதியில் தேய்மான கணிப்பீடு இடை நிறுத்தப்படும். ஆண்டின் இறுதியில் அகற்றுவதற்கென அடையாளம் காணப்பட்ட எந்தவொரு சொத்தும் அக் குறித்த புள்ளி வரை தேய்மானப்படுத்தப்படுகின்றன. ரூபா 5,000 க்கு மேற்பட்ட எந்தவொரு வகுதியும் நிலையான சொத்தாகக் கருதப்படுவதுடன், ஏனைய பண்டங்கள் பாவனைப் பண்டங்களாகக் கருதப்படுகின்றன.

1.3.2 அருவச் சொத்துக்கள்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது இணைய தளம், மென் பொருள், தகவல் தொழில்நுட்ப வழிமுறை என்பனவற்றிற்கான நிதி, இலங்கையில் தரமான உட் கட்டமைப்பு அபிவிருத்திக்கான மானியமான சுவீடன் அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. இத் திட்டம் 2010 ஆம் ஆண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டது. இதற்கான மூலதனச் செலவினம் நடைமுறையற்ற சொத்தாகக் கருதப்பட்டு 2013 ஆம் ஆண்டில் இருந்து 5 வருட காலத்தில் பதிவழிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

1.4 பதிவேட்டுப் பொருட்கள்

பதிவேட்டுப் பொருட்கள் மாத்திரமே ஆகக் குறைந்த கொள் விலையில் அல்லது பெறத் தக்க தேறிய பெறுமதியின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

1.5 பெறுகைகள்

பெறுமதி கிடைக்குமென மதிப்பிடப்படும் தொகையின் கீழ் பெறுகைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

1.6. பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

1.6.1 நடைமுறைப் பொறுப்புக்கள்

கோரிக்கையின் பேரில் அல்லது ஐந்தொகைத் திகதியில் இருந்து ஒரு வருட காலத்தினுள் கொடுப்பனவுக்கு உரியனவையாகக் காணப்படுபவையே நடைமுறைப் பொறுப்புக்களாகும். நிதி அறிக்கைகள் தயாரிக்கப்படும் போது அறிந்து கொள்ளப்பட்ட சகல பொறுப்புக்களும் கணக்கிடப்பட்டுள்ளன.

1.7 வருமானமும் செலவினமும்

1.7.1 வருமான அங்கீகாரம்

பயிற்சித் திட்டங்கள் மற்றும் தராதர அங்கீகாரம் என்பனவற்றின் மூலம் பெறப்படும் வருமானம் திரட்டிய அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன. இருந்த போதிலும், தராதர அங்கீகாரம் வழங்கப்பட்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் மீள் மதிப்பீடு செய்யப்படுவதற்கான அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து, வருடாந்த தராதர அங்கீகாரக் கட்டணம் மூன்று வருடங்களுக்கு விதிக்கப்படுகின்றது. தராதர அங்கீகார சான்றிதழ் வழங்கப்படும் போது முதலாம் வருடத்திற்குரிய 3 வருடாந்தக் கட்டணம் விதிக்கப்படும். இதே விதமான நடைமுறை 2 ஆம் மற்றும் 3 ஆம் வருடங்களுக்கான மீள் மதிப்பீட்டிற்கும் பொருந்தும்.

